

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (15.5.2023) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்திலிருந்து, ஜி.எஸ்.டி. சாலை வழியாக போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகளை இயக்குவது தொடர்பாகவும், தென்மாவட்ட பேருந்துகள் செல்ல மாற்று வழித்தடங்கள் அமைப்பது தொடர்பாகவும் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் போக்குவரத்துத்துறையுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் முனைவர் அ.அமல்ராஜ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, போக்குவரத்து ஆணையர் இல.நிர்மல்ராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ராகுல் நாத், வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகர காவல் கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து) திருமதி.ந.காமினி, காவல் இணை ஆணையாளர் முனைவர்.பா.மூர்த்தி, காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.உதயா கருணாகரன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தாயகம் கவி - எம்.சாமிக்கண்ணு பங்கேற்பு!

*சென்னை, மே.16-*

*சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் தெற்கு பகுதி கழகம் சார்பில் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம். தெற்கு பகுதி, கழக செயலாளர் முன்னாள் மாமன்ற உறுப்பினர் எம்.சாமிகண்ணு தலைமையில் நடந்தது.*

*இந்து சமய மற்றும் அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ வரவேற்புரையாற்றினார். தலைமை கழக பேச்சாளர் வழக்கறிஞர் வி.நன்மாறன் சிறப்புரையாற்றினார்.*

*கோ.ஏகப்பன், இசட். ஆசாத், வழக்கறிஞர் இந்திரஜித், எம்.பெரோஸ்கான், கனல் கங்கா, சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், தமிழ்செல்வி சசிகுமார், ரமணி லோகேஷ், மு.சரவணன், அ.கோவிந்தன், த.கருணாநிதி, வனஜா சண்முகம், அ.கருணாநிதி, எஸ்.வெங்கடேசன், எம்.தமீம், புல்லு டி.சுரேஷ், வி.கே.வெங்கடேசன், ஜி.கிருஷ்ணகுமார், ர.கலைவேந்தன், இரா.வீரமணி, கே.ராஜ்முகமது, வே.து. தாமரை செல்வன், நெல்லை மா.முத்தையா, இரா.புருஷோத்தமன், வெல்டிங்.எஸ்.பாபு, கி.நாகலிங்கம், எல்.சுப்பிரமணி, அ.கதிரவன், எச்.திவாகர், மெடிக்கல்.கே.ஆர்.சதிஷ், எஸ்.சதிஷ்குமார், தில்லை கதிரவன், புல்லட்.கி.ரமேஷ், எம்.எஸ். மைனர்பாபு, எஸ்.ஜெயகுமார்,*

*எம்.சண்முகவேல், அ. சேதுராமன், பி.புகழ்செந்தில், பா.பி.தாஸ், ஈஸ்வரிகண்ணன், சாந்திமாசிலாமணி, எம்.சக்திவேல், கோ.கருணாகரன், சாவித்திரி அன்பழகன், இரா.தனசேகர், எஸ்.மணிகண்டன், வி.விக்னேஷ், ஜி. மதன்குமார், வா.பிரதாப், வி.ஜி.எஸ்.கௌதம், எஸ். கௌதம், எஸ்.ராஜேஷ், எஸ். தனலட்சுமி, விஜயகுமாரி, ஜி.ஏழுமலை, ஆ.குருமூர்த்தி, ஓட்டேரி.ஆர்.சூரி, ரா.ஞானசௌந்தரி, கே.முருகா, என்.எம்.செந்தில்சரவணன், கே.முரளி(எ) குள்ளா, டி.நீதிதேவன், வி.டில்லிராஜ், பி. மலர், எம்.ஜீவநாதன், ம. வெற்றிவேல், நா.சத்திய, வி. கிருஷ்ணன், டி.கமலகண்ணன், பி.வினோத், என். கோபாலகிருஷ்ணன், புரசை. எஸ்.சீனிவாசன், எஸ்.லோகநாதன், எம்.எஸ்.ராஜசேகர், குமாரிஆனந்தன், இரா.ஆறுமுகம், ஏ.பூங்காவனம், எஸ். சி.பாபு, ஆர்.அருண்குமார், ஆர்.கிருஷ்ணன், அ.மூவேந்தன், ஆர்.தேவேந்திரன், இ.எ.குலாப், கே.ஏ.ரபிக், அப்பு (எ) பிரதிப்குமார், எஸ். சசிகலா, கே.சிவபாதம், எஸ். சோனிரமேஷ், ஆர். சுரேந்திரன், கே.பி.சுரேஷ், சி.தர்மன், பி.தமிழ்வாணன், இரா.கார்த்திக், சி.நோவீஸ், வே.ராம்குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*76வது வட்டச் செயலாளர் எஸ்.சசிகுமார் நன்றியுரையாற்றினார்.*



திரு.வி.க நகர் தெற்கு பகுதி கழகம் சார்பில் தமிழ்நாடு அரசின் இரண்டு ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி செயலாளர் எம்.சாமிகண்ணு தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் –அமைச்சர் பி. கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது. கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம். எல்.ஏ. வரவேற்புரையாற்றினார். தலைமை கழக பேச்சாளர் வழக்கறிஞர் வி.நன்மாறன் சிறப்புரையாற்றினார். கோ.ஏகப்பன், இசட்.ஆசாத், வழக்கறிஞர் இந்திரஜித், எம்.பெரோஸ்கான், கனல் கங்கா, சுதாதீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், தமிழ்செல்விசசிகுமார், ரமணிலோகேஷ், மு.சரவணன், அ.கோவிந்தன், த.கருணாநிதி, வனஜாசண்முகம், அ.கருணாநிதி, எஸ்.வெங்கடேசன், என்.தமீம், புல்லு டி.சுரேஷ், வி.கே.வெங்கடேசன், ஜி.கிருஷ்ணகுமார், ர.கலைவேந்தன், இரா.வீரமணி, இரா.வீரமணி, கே.ராஜ்முகமது மெடிக்கல்.கே.ஆர்.சதிஷ், மைனர்.எம்.எஸ்.பாபு ஆகியோர் கலந்து கொண்டனர் எஸ்.சசிகுமார் 76வது வட்ட செயலாளர் நன்றியுரையாற்றினார்.

## 173 வது வட்டம்:

# வேளச்சேரி ஏ.நீலகண்டன் இல்ல விழா!

### கழக முன்னணியினர் வாழ்த்து!

*சென்னை, மே 16-*

*சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்குப் பகுதி 173 வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.நீலகண்டன் இல்ல விழாவில் கழக முன்னணியினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

*சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்குப் பகுதி 173வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.நீலகண்டன் - அமலா ஆகியோரின் புதல்வர் நீ.நித்தின் முதலாமாண்டு பிறந்த நாள் விழா இன்று (16.5.2023) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு, திருவான்மியூர், எல்.பி. சாலையில் உள்ள சூர்யா ஹாலில் நடைபெறுகின்றது.*

*இவ்விழாவில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*நிகழ்ச்சிக்கு வருகை தருவோரை, ஜி.ஏழுமலை, வரதா, எம்.தேவராஜ், சாந்தி, இ.மணிகண்டன், எம். சரண்யா, எம்.ரோஷன், எம். ஹர்ஷிதா, பி.ரமேஷ், ஆர். பூங்கொடி, ஆர்.விஷ்வாசாய், ஆர்.சஸ்வந்த் ஆகியோர் வரவேற்கின்றனர். ஏ.நீலகண்டன், நீ.ரோஹித் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

# 98வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

### ஆர்.எம்.ரங்கநாதன் அறிக்கை!

*சென்னை, மே.16-*

*சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு பகுதி 99 வது வட்டக் கழக செயல் வீரர்கள் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் - இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி இன்று (16.05.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 6:00 மணி அளவில் என் 20 கணேஷ் பாகு பார்க்கிங் நான்சி தெரு புரசைவாக்கம் எனும் முகவரியில் நடைபெறுகிறது. எனது (வட்டக் கழகச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன்) தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி முன்னிலை வகிக்கிறார்.*

*இக்கூட்டத்தில் எழும்பூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர் சொ.வேலு கலந்துகொண்டு சிறப்பிக்கின்றார். எழும்பூர் தொகுதி தலைமை கழக பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார். எனவே இக்கூட்டத்திற்கு 99 வது வட்டக் கழகம் உள்ளடக்கிய மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள். அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.*

## சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில்

# ரூ.54.61 கோடி மதிப்பில் தமிழ்நாடு - தொழில்நுட்ப மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே 16 -

சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.54.61 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.05.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 54 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

2022-2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில், “செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திர அறிவு (Machine Learning), நம்பிக்கை இணையம் (Block chain) போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தை இந்த அரசு நன்கு அறிந்துள்ளது. இதனை ஊக்குவிப்பதற்காக, சென்னையில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT) அரசால் அமைக்கப்படும். மாநிலத்தின் பெரும் தொழில்நுட்பசவால்களுக்குத் தீர்வு காணவும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதற்கான பணிகளை ஒருங்கிணைக்கவும் இந்த மையம் செயல்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 54 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

**உலகளாவிய இணைப்புகளை இம்மையம் உருவாக்கும்!**

இம்மையம், புதுமைகளை (Innovations) ஒரு சேர அமைப்பதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க ஒரு ஊக்கியாகச் செயல்பட்டு, உலகளவில் தமிழ்நாட்டை முதல் 10 இடங்களில் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டது. ஆழ்தொழில்நுட்ப (DeepTech) மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்ப முனைவோர்களை ஊக்குவித்து, பெரு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் ஒருங்கிணைந்து, உயர்தொழில்நுட்ப முன்மாதிரி மற்றும் வடிவமைப்பு வசதிகளை அமைத்து உலகளாவிய இணைப்புகளை இந்த மையம் உருவாக்கும்.

இந்தியாவிலேயே முதன் முறையாக நிறுவப்பட்டுள்ள இத்தகைய தொழில்நுட்ப மையம், கல்வி நிறுவனங்கள், ஸ்டார்ட்அப்கள் (startups), பெரு நிறுவனங்கள் மற்றும் அரசு ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும். இம்மையத்தின் தொடக்க விழாவின் ஒரு பகுதியாக, 19 ஸ்டார்ட்அப் (startup) நிறுவனங்களுடன் இணைந்து வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**லாப நோக்கமற்ற நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது!**

இத்திட்டச் செலவிற்கு ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் 50% நிதியினை வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு 37% நிதியுதவியும், தொழில் நிறுவனங்கள் மூலம் 13% நிதி உதவியும் பெறப்பட்டுள்ளது. இந்த மையம், தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின்கீழ் ஒரு லாபநோக்கமற்ற நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், மின் ஆளுமை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் பிரவீன் பி. நாயர், தமிழ்நாடு தொழில்நுட்ப மைய (iTNT) தலைமை நிருவாக அலுவலர் விஜய் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 38 ஆண்டுகால வரலாற்றை தக்கவைத்த தேர்தல் முடிவுகள்!

# கர்நாடகாவில் வெற்றி பெற்று சரித்திரம் படைத்துள்ளது காங்கிரஸ்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மே 16 -

கர்நாடகாவில் 135 இடங்களில் வெற்றி பெற்று சரித்திரம் படைத்துள்ளது காங்கிரஸ் கட்சி என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து 15.05.2023 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

கடந்த 10 -ந்தேதி கர்நாடக மாநில சட்டசபைக்கு தேர்தல் நடந்தது. இந்த மாநிலத்துக்கு என பல சிறப்புகள் உண்டு. 224 தொகுதிகள் இங்கு உண்டு. பா.ஜ.கவும், காங்கிரஸ் கட்சியும் நீயா... நானா... என்று போட்டியிடும் நேரத்தில், ‘நானும் இருக்கிறேன், நீங்கள் ‘கிங்’ என்றால், நாங்கள்தான் ‘கிங் மேக்கர்’, என்று கூறும் தேவேகவுடாவின் மத சார்பற்ற ஜனதாதள கட்சியும், சில நேரங்களில் யாருக்கும் தனி ‘மெஜாரிட்டி’ கிடைக்கவில்லை யென்றால் இந்த கட்சியின் ஆதரவோடுதான் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலையை உருவாக்கியிருந்தது.

இந்த மாநிலத்தில் என்னதான் கட்சி அரசியல் இருந்தாலும், சாதி அரசியலும் மேலோங்கியிருக்கிறது. அனைத்து கட்சிகளுமே அந்தந்த சாதி பெரும்பான்மையாக இருக்கும் தொகுதிகளில், அந்தந்த சமுதாய வேட்பாளர்களையே களத்தில் இறக்கியது. இரு கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் முழுமூச்சாக தேர்தல் பணியில் ஈடுபட்டனர்.

பிரதமர் நரேந்திர மோடி 11 முறை இந்த மாநிலத்துக்கு வந்து சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்தார். ‘மத்தியில் பா.ஜ.க. ஆட்சியிலிருக்கும் நிலையில் கர்நாடகத்திலும் பா.ஜ.க ஆட்சி இருந்தால் இரட்டை என்ஜின் வேகத்தில் மாநிலம் வளர்ச்சியை காணும்’, என்று கூறி, இந்த 5 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் கர்நாடகா அடைந்த நன்மைகளை பட்டியலிட்டார். மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இங்கேயே முகாமிட்டு, ‘ஆட்சி அமைக்க தேவையான 113 இடங்களுக்கு மேல் 15 இடங்களையாவது பா.ஜ.க பெறும்’ என்று மிகுந்த நம்பிக்கையுடன் கூறினார்.

காங்கிரஸ் கட்சியில் ராகுல் காந்தி தனது இந்திய ஒற்றுமை நடைபயணத்தில் அதிக நாட்களை கர்நாடக மாநிலத்தில் செலவழித்தார். சோனியா காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோரும் இங்கு தீவிர பிரச்சாரம் செய்தனர். இவ்வளவு இருந்தும் தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு பெரிய வெற்றியைக் கொடுத்துள்ளது. காங்கிரஸ் யாருடைய தயவுமில்லாமல் மிக பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. இந்த சாதனையில் கடந்த தேர்தலில் 78 இடங்களைப் பெற்ற நிலையில், இப்போது 135 இடங்களில் வெற்றி பெற்று சரித்திரம் படைத்துள்ளது. இதுபோல முன்பு 104 தொகுதிகளில் வெற்றி பெற்று இருந்த பா.ஜ.க இப்போது 66 இடங்களில் மட்டும் வெற்றி பெற்று பெரிய சரிவை கண்டுள்ளது. இதில் மத சார்பற்ற ஜனதாதளம்தான் யாரும் கண்டுகொள்ள அவசியம் இல்லாத வகையில் 19 இடங்களில்தான் வெற்றியை பெற்றுள்ளது. பா.ஜ.க.வும், மத சார்பற்ற ஜனதா தளமும் கூட்டணி வைத்தால் கூட ஆட்சியை அமைக்க முடியாது.

கடந்த 34 ஆண்டுகளாக எந்த கட்சியும் இவ்வளவு அதிக தொகுதிகளில் வெற்றிபெறவில்லை. இவ்வளவு அதிக ஓட்டு சதவீதத்தையும் பெறவில்லை என்ற சாதனையை காங்கிரஸ் படைத்துள்ளது. ஆனால் பா.ஜ.க.வின் வாக்கு சதவீதம் 0.2 சதவீதம் தான் குறைந்திருக்கிறது. காங்கிரசுக்கு வெற்றி எதிர்பார்த்தது என்றாலும், இவ்வளவு பெரிய வெற்றி எதிர்பாராத ஒன்றாகும். பா.ஜ.க.வுக்கு இது எதிர்பாராத தோல்வி. கர்நாடகத்தில் கடந்த 38 ஆண்டுகளாக ஒரு முறை ஆட்சியில் இருந்த கட்சி மீண்டும் அடுத்த முறை ஆட்சி செய்த வரலாறு இல்லை. அந்த வரலாறு இப்போது காங்கிரஸ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பதன் மூலம் நிலை நாட்டப்பட்டுள்ளது. மொத்தத்தில் கர்நாடகத்தில் வரலாறு மாறவில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புழல் எம். ஜெயபால்

### மே 16 (2013)



திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம், செங்குன்றம் பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்ட தோழர்களில் இவரும் ஒருவர்.

கல்லூரியில் படிக்கும் காலந்தொட்டு தி.மு.க. மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியவர்.

புழல் ஒன்றிய பெருந்தலைவராகவும், மாநில பெருந்தலைவர்கள் மன்ற செயலாளராகவும், சைதை தாலுக்கா வேளாண் விளைபொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத் தலைவராகவும் சிறப்புற பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளராகவும், மாவட்ட இலக்கிய அணி புரவலராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம்

### மே 16 (1993)



திருத்துறைப்பூண்டி வட்டக் கழகச் செயலாளர், தஞ்சை மாவட்ட அவைதலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

திருத்துறைப்பூண்டி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“திருச்சிக்கு அன்பில் தர்மலிங்கமும், தஞ்சைக்கு பண்பில் தர்மலிங்கமும்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**